

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

"முஸம்மில்" ஸூரா வின் 70 பலன்கள்

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

மர்ஹூமா ஹாஜி ஆயிஷா பீவி

அவர்கள் ஹக்கில் துஆ செய்யும்படி

கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு,

குடும்பத்தினர்

“முஸம்மில்” ஸூரா வின் 70 பலன்கள்

ஆசிரியர் : மேலப்பாளையம்,
ஹாஜி, டாக்டர்,
ஆ.மு. செய்யது அப்துல் காதர், M.A.,

ஐந்து கலிமாக்கள்

1-வது கலிமா (தையிபு)

லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹி.

2-வது கலிமா (ஷஹாதத்து)

அஷ்ஹது அன் லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்க லஹு-வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு.

3-வது கலிமா (தம்ஜீது)

ஸுப்ஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி வலா இலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர் வலா ஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹில் அலிய்யில் அளீம்.

4-வது கலிமா (தவ்ஹீது)

லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து யுஹ்யீ வயுமீத்து பியதிஹில் கய்ரு வஹுவ அலா குல்லி ஷய்யின் கதீர்.

5-வது கலிமா (ரத்துகுப்ர்)

அல்லாஹும்ம இன்னீ அவூது பிக்க மின்அன் உஷ்ரிக்க பிக ஷய்அன், வஅனா அஃலமு வஅஸ்தக்பிருக்க, லிமாலா அஃலமு இன்னக்க அன்த அல்லாமுல் குயூப், துப்து அன்ஹு, வதபர் ரஃது, அன்குல்லி தீனின் ஸிவா தீனில் இஸ்லாம், வஅஸ்லம்து, வஆமன்து வஅகூலு லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்.

வாழ்த்துரை

மௌலானா, மௌலவி, அல்ஹாபிஸ், K.A. முஹம்மது முஹ்யித்தீன், பாகவி, கலீபா, தரீகத்துல் காதிரியதில் ஜமாலிய்யா, துணைத்தலைவர், நெல்லை–சிதம்பரனார் மாவட்ட ஜமாஅதுல் உலமா சபை, தலைவர், மேலப்பாளையம் ஜமாஅதுல் உலமா சபை, முதல்வர் மனாருல் உலூம் அல்ஹமீதிய்யா, மேலப்பாளையம்.

அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் ஆரம்பிக்கின்றேன். வழிகாட்டும் வான்மறையின் வசனங்களைக் கொண்டும் இறைவனின் இனிய திருப்பெயர்களை வைத்தும் என்னென்ன பேறுகளை பெறலாம் என்பதை இந்நூலில் அற்புதமாக பட்டவர்த்தனமாக, விரிவாக, விளக்கமாக தக்க சான்றுகளுடன் தரப்பட்டுள்ளன. இதற்கென சில விதிமுறைகள் உண்டு. அவைகளை நம் கவனத்தில் கொண்டு செயல்பட்டால் அதிவிரைவில் பென்னம் பெரிய பயனைப் பெறலாம்.

1. விதிமுறையில் ஒன்று 'உளூ' நம்மை நாம் பரிசுத்தப்படுத்திக் கொள்வது.

2. தித்திக்கும் தேன்மறையின் திரு வசனங்களில் எதை எதை எப்படி ஓதினால் என்ன பயன் பெறலாம் என பறை சாற்றப்பட்டுள்ளதோ அதை பூரண திருப்தியுடனும், பயபக்தியுடனும் உண்மையென முழுமையாக நம்பி, நல்லெண்ணத்துடனும், நடந்தே தீரும் என்று நெஞ்சுறுதியுடனும், நாணயத்துடனும் நாம் செயல்படவேண்டும். இது நடைமுறைக்கு சாத்தியமாகுமா? சாத்தியமாகாதா? என்று திருப்தியோ அவநம்பிக்கையோ, ஐயமோ கொள்வது ஒருபோதும் கூடாது.

ஏனெனில், தூயநாயனின் திருமறை வசனம் இவைகள். இவைகளை இறைவன் 'விசுவாசிகளுக்கு அருளாகவும், அருமருந்தாகவும் அருளியுள்ளோம்' என உரைக்கிறான். ஆகவே அவைகள் நமக்கு நோய் நிவாரணம் நல்கும் குறிக்கோளில் வெற்றி வாகை சூட வைக்கும் என உறுதியாக நம்பி செயல்பட்டால் பென்னம் பெரிய வெற்றியை பெற்றுத் தரும் என்பது பட்டவர்த்தனமாக புலப்படும்.

3. வசனங்களைப் பற்றி வீணான வினாக்களைக் கிளப்பி குழப்பத்தை உண்டுபண்ணுபவர்களிடமும் அவைகள் தரும் பயன்களைப்பற்றி தவறான எண்ணங்களை ஐயம் என்னும் தீய நஞ்சில் தோய்த்து நாவென்னும் வில்லில் பூட்டி தகாத வார்த்தைகளால் வீசி எரிபவர்களிடமும் மௌனமாக இருப்பதே மிக்கமேல்.

ஏனெனில், "அல்லவர்கள் விதண்டாவாதம் செய்யவந்தால் நல்லவர்கள் அஸ்ஸலாமு அலைக்கும் என கூறி ஒதுங்கி விடுவார்கள்" என தித்திக்கும் தேன்மறை கூறுகிறது.

4. எந்த 'அமலை' ஆரம்பிக்கும் முன்பும் ஸலவாத் ஒரு சில தடவைகள் ஓதிக் கொள்வது சாலச்சிறப்பு. அதனைத்தானும் தன் அமரர்களும் செய்வதாக வான் மறையில் வல்லவன் வழுத்துகின்றான். அது, உங்கள் நோக்கம் நன்கு நிறைவேர, விரைவில் வெற்றிகிடைக்க வாய்ப்பருளும்.

5. இவ்வாறு அமல் செய்தால் நாட்டம் இன்ஷா அல்லாஹ் நிறைவேறியே தீரும்; நோய் நீங்கும்; கடன்கள் தீரும்; குழந்தை பாக்கியங்கள் கிடைக்கும்; செல்வங்கள் பெருகும்; மன அமைதிகிட்டும்; கருணையாளன் கிருபை செய்வான்; பேரருள் புரிவான்.

குர்ஆன் எப்படி அருமருந்தாக பயன்படுகிறது என்பதற்கு சில உதாரணங்களைத் தருகிறேன். ஒரு மெஞ்ஞானி கூறுகிறார் :

"என் குரு பீடம் ஞான மேதை பின் வருமாறு எனக்கு கூறினார்கள். யாரேனும் உன்னிடம் வந்து தன் குறைகளைக் கூறி பரிகாரம் தேடினால், நீ சிந்தி திருமறையைப்பற்றி உன் உள்ளத்தில் உதிப்பாகும் உயர் வசனத்தை வைத்து பரிகாரம் செய்; பயன் காண்பாய்", என்று அன்றிலிருந்து என்னிடம் வருபவர்களுக்கு குர்ஆன் வசனங்களிலிருந்தும் அஸ்மாவுல் ஹுஸ்னாவிலிருந்தும் எது பொருத்தம் என வருகிறதோ அதை எழுதிக்கொடுத்து பரிகாரம் தேடி பயனடைந்திருக்கின்றேன் என்று.

மெய்நிலை கொண்ட ஞானி முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி) அவர்களிடம் ஒரு முரடன் "எனக்கு ஒரு தாயத் எழுதிக் கொடுங்கள். நான் அதனை அணிந்து கொண்டால் வாளினாலோ, வேலினாலோ வேறு எந்த ஆயுதத்தாலோ எவன் தாக்கினாலும் அது என்மீது படக்கூடாது. எனக்கு எந்த பாதிப்பும் வரக்கூடாது", என்று கூறினான். அவர்களும் "நல்லது, அவ்விதமோ தருகிறேன்" என்று கூறி தம் அறைக்குள் நுழைந்த அவர்கள் ஒரு நொடியில் வெளியேறி, ஒரு தாளைச் சுருட்டிக்கொண்டு வந்து தஃவீஸ் முடிந்து "நீ இதனை அணிந்துகொள் இது உன்னிடம் இருக்கும் காலமெல்லாம் உன்னை ஒரு தீங்கும் தீண்ட முடியாது" எனக்கூறி கொடுத்துவிட்டு, "நீ இதை அறியவிரும்பி பிரித்து பார்ப்பின் அதன் ஆற்றல் அனைத்தும் பறிபோய்விடும். அதன்பின் அது வெத்துக் காகிதமேயன்றி வேறில்லை" என்று மொழிந்தார்கள்.

மிகவும் மகிழ்வுடன் சென்ற அவன் அதனைத் தான் வளர்த்த கடாவின் கழுத்தில் கட்டி அதனை அரிவாளால் வெட்டினான். வெட்ட வெட்ட அரிவாள் மழுங்கவும், மடங்கவும் செய்ததே தவிர வெட்டவில்லை. இதைக் கண்டு அவனுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவேயில்லை.

இப்பொழுது அவனுடைய உள்ளத்தில் ஒருவித ஐயம் தளிர்விட்டது. 'தாயத்து வேண்டுமென்று கேட்ட அடுத்த விநாடியே அதில் ஏதோ எழுதிக் கொண்டுவந்து அவர்கள் கொடுத்தார்கள். அவ்விதமானால் அவர்கள் அதில் என்ன்தான் எழுதியிருப்பார்கள்?' என்று எண்ணினான். அடுத்தகணம் அதை விறுவிறு எனப் பிரித்தான். அதில் 'அலிஃப்' என்ற அரபிமொழியின் முதல் எழுத்தான ஒரு செங்குத்தான கோடு மட்டும் எழுதப்பட்டிருந்ததைக் கண்டதும் இந்த 'அலிஃபுக்கு' இத்துணையாற்றலா? என்று எண்ணினான். அடுத்தகணம் ஆண்டகை அவர்கள் கூறிய எச்சரிக்கையும் அவனுக்கு நினைவுக்கு வந்தது. அது அவனைக் கொல்லாது கொன்றது. விறுவிறுவென ஆண்டகை அவர்களின் இருப்பிடம் நோக்கி நடந்து வந்தான். ஆண்டகை அவர்களைச் சந்தித்து, நடந்தவையனைத்தும் நவின்றான். அதைக்கேட்ட ஆண்டகை அவர்கள், "இந்த அலிஃபுக்கு ஏதோ ஆற்றல் உள்ளது என்று எண்ணிக்கொண்டு நீ பேசுகிறாய். அந்த அலிஃபை எழுதுகிற கரத்திற்கு பின்னணியாக ஒருகரம் இருந்து கொண்டு அந்த அலிஃபை எழுதியது. அதுவே அல்லாஹ்வின் திருக்கரம். அக்கரம் அலிஃபை என்ன, ஒரு நுக்தாவை (புள்ளியை) வைத்தால்கூட அந்த நுக்தா அந்த அலிஃபைவிட மிகவும் ஆற்றலுடையதாக ஆகிவிடும். ஆதலால் அந்த நுக்தாவை வைக்கக்கூடிய இறைவனுடைய திருக்கரத்திற்குத்தான் மாண்பு அனைத்துமுரியது", என்று கூறி அவனை அனுப்பிவிட்டார்கள்.

இதுபோன்றே யார் எழுதித்தந்தாலும் அவர்கள் எழுதித்தந்து ஓதச் சொன்ன ஆயத், இஸ்முகள் அல்லாஹ்வின் ஆயத்துக்கள், அல்லாஹ்வின் நாமங்கள் என்பதை நாம் மறந்துவிடாமல் முழுநம்பிக்கையுடனும், ஆவலுடனும் ஓதும்பொழுது, வாங்கி அணிந்துகொள்ளும்போது, எழுதி வீட்டில் மாட்டி வைக்கும்பொழுது அல்லாஹ்வின் சக்தி வேலை செய்து அங்கு அதன் ஆற்றலை – சக்தியை, திறமையை வெளிப்படுத்துகிறது.

இதனை நிதர்சனமாக நாம் காணமுடிகிறது. காரணம் ஏழு, எட்டு ஆண்டுகளுக்குமுன் இஸ்லாத்தை ஏற்ற ஸ்பெயினிலுள்ள இரு மருத்துவமேதைகள் மன்சூர், அப்துஸ்ஸலாம் உமர் அபூதாரிக் என்ற இருவரும் ஸ்பெயினிலுள்ள "குர் ஆனா தாஃ" அருகிலுள்ள இடத்தில் ஒரு மனநிலை மையம் அமைத்து குர் ஆனின் மூலம் சிகிச்சை செய்கிறார்கள். அதுமட்டுமல்ல, நாலாயிரம் பேர்களுக்கு இவ்வாறே சிகிச்சை செய்து நோய்நிவாரணம் கண்டிருக்கிறோம் என்று கூறுகிறார்கள்.

இந்தச் செய்தி 11-3-88 அரபிய 'அல் முஸ்லிமூன்' வாரஇதழிலும் வெளியாகியிருக்கிறது. ஆகவே மரியாதைக்குரிய, டாக்டர் அல்ஹாஜ், ஆ.மு. செய்யத் அப்துல் காதிர், M.A., அவர்கள் மூலம் வெளியாகும் இந்நூலைப் பெற்று அனுபவரீதியில் அமல் செய்து நிதர்சனமாக நாமும் அதன் சக்தியை கண்டுணர்ந்து வியத்தகும் பயனைப்பெற பேரருளாளன் பேரருள் புரிவானாக!

நூலாசிரியருக்கு நீண்ட ஆயுளை நல்கி, நல்ல ஞானத்தை மேலும் மேலும் அருளி பன்னூற்றுக்கணக்கான சீரிய நூல்களை சிறப்பாக எழுதி வெளியுலகுக்கு வழங்கி நாமும் அவர்களும் ஈடில்லாப்பேறுகளைப் பெற கருணாமாரிப் பொழிவானாக.

ஆமீன்.

இங்ஙனம்,

மௌலானா, மௌலவி, அல்ஹாபிஸ்

K.A. முகம்மது முஹைதீன் பாகவி,

மேலப்பாளையம்.

முன்னுரை

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

எல்லாப்புகழும் புகழ்ச்சியும் அல்லாஹ்வுக்கு உரித்தாகுக. எங்கள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் கிளையார், தோழர்கள், வழியினர் மீதும் எல்லாம் வல்ல அல்லாஹ் தனது ஸலவாத்தையும், ஸலாமையும் என்றென்றும் சொரிந்தருள்வானாக!

"முஸம்மில் சூராவின் 70 பலன்கள்" என்னும் இச்சிறு நூல், 'காதர் அறிவக'த்தின் மூன்றாவது வெளியீடாக வாசகர்களின் கையில் இருக்கிறது. முஸம்மில் சூராவின் முழுப்பலன்களையும் அனைத்தையும் படைத்த அல்லாஹ்வே அறிந்தவன். ஆனால் முன்னோர்கள் தமது வாழ்வில் கண்ட பலன்கள் சிலவற்றை எழுதியிருக்கிறார்கள். அதனையே இந்நூலில் எடுத்து எழுதியிருக்கிறேன். தன்னேரிலாத தமிழ் நாட்டில் தலைசிறந்த மார்க்க மேதைகளில் ஒருவரும், நெல்லை– சிதம்பரனார் மாவட்ட ஜமாஅதுல் உலமா சபைத் தலைவரும் தரீகதுல் காதிரியதில் ஜமாலிய்யா கலிபாவும், மேலப்பாளையம் மனாருல் உலூம் அல்ஹமீதிய்யாவின் முதல்வரும், எனது சிறிய வயதில் திருகுர்ஆனையும் இஸ்லாமிய நடைமுறைகளையும் எனக்கு கற்றுத்தந்த அல்ஹாபிளுல் ஸாஹித், ஹஸ்ரத், அப்துல் ஹமீது சாஹிப் (ரஹ்) அவர்களின் திருமகனாரும் ஆகிய ஆலிஜனாப், மௌலானா, மௌலவி, அல்ஹாபிஸ் K.A. முகம்மது முஹ்யித்தீன் பாகவி அவர்கள் மிகுந்த வேலைகளுக்குகிடையில் மனமுவந்து வாழ்த்துரை தந்து உதவியிருக்கிறார்கள். தமது மனதில் நாடும் நல்ல மார்க்க கருத்துக்களை யாருக்கும் அஞ்சாது ஒழிவு மறைவின்றி எந்த மேடையிலும் உரைத்திடும் பண்பாளர் அவர்கள். அவர்களுக்கு எனது நன்றிகளை எவ்விதம் தெரிவிப்பது என்று தெரியவில்லை. அல்லாஹ்வே அவர்களுக்கு நல்லருளை தர வல்லன். ஆரோக்கியம் மிகுந்த நீடித்த வாழ்வினை அவர்களுக்கு அளித்து இரட்சிப்பானாக. ஆமீன்!!

இந்நூலை வெளிக்கொணர ஆக்கமும், ஊக்கமும், பொருளுதவியும் நல்கிய எனது 'ரூஹு' மகனார், ஜனாப் J. காதர் இபுறாகீம், B.Tech., D.B.A., D.P.C., Mag., D.N.Y.T., D.N.D., அவர்களுக்கும், மலேசியா வாழ் வணிக வள்ளல், ஜனாப், A. முகம்மது ரபீக் அவர்களுக்கும் எனதுள்ளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்கு ஆரோக்கியமான நீடித்த வாழ்வினையும், அனைத்து இதர நலன்களையும் அளித்தருள எங்கும் நிறைந்த அல்லாஹ்வை இறைஞ்சுகிறேன்.

ஹாஜி டாக்டர். ஆ.மு. செய்யது அப்துல் காதர், M.A.,
கலிபதுல் ரிபாயியுல் அஹ்மதியதுல் காதிரி
நூலாசிரியர்

மேலப்பாளையம்
25.8.1994

“முஸம்மில் ஸூராவின் 70 பலன்கள்”

அல்லாஹ்வை இறைஞ்சுவதின் அவசியம்

“படைத்தவன் படைப்பெல்லாம் மனிதனுக்காக மனிதனைப் படைத்தான் தன்னை வணங்க” என்று கூறுவர். ஊர்வன, பறப்பன, தரையில் வாழ்பவை, தண்ணீரில் வாழ்பவை, தரையிலும் தண்ணீரிலும் வாழ்வன, மரம், செடி, கொடிகளில் வாழ்வன, மண்ணுக்குள் வாழ்பவை, கல்லுக்குள் வாழ்பவை, மனிதனுக்குள்ளும், பிற உயிரினங்களுக்குள்ளும் உயிரோடிருப்பவை, அமரர்கள், ஜின்கள் போன்ற அனைத்துயிர்களையும் உயிரில்லாதவற்றையும் காத்து இரட்சிப்பவன் அல்லாஹ் ஒருவனாக இருக்கிறான். அவன் தனித்தவன்; எங்கும் நிறைந்தவன்; அவனே அனைத்தையும் ஆள்பவன்; ஆண்டான்; ஆண்டவன். மற்ற அனைத்து உயிர்களும் உயிரல்லாதவைகளும் அவனின் அடிமைகள்.

ஆண்டவன் தனது அடிமைகள் மீது பேரன்பு கொண்டவன் “நீங்கள் கேளுங்கள் நான் தருகிறேன்”, என்று கூறுகிறான். ஆண்டானிடம் அடிமைகள் கேட்க கடமைப்பட்டவர்கள். ‘தன்னிடம் பணிவுடன் கேட்பதை அல்லாஹ் பிரியம் வைத்தவனாக இருக்கிறான். தனது தேவைகளை தன்னிடம் கேட்காத மனிதரை அவன் விரும்புவதில்லை’ என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொல்கிறார்கள்.

மனிதன் இவ்வுலகில் பிறக்கிறான்; பிறந்தது முதல் அவனின் உலக வாழ்க்கை தொடங்குகிறது. வாழ்வில் பற்பல நிலைகள் – குழந்தைப் பருவம், தவழும் பருவம், நடக்கும் பருவம், பள்ளி செல்லும் பருவம், திருமணப் பருவம், மக்கட் பேறு அடைதலும், அவர்களைப் பாதுகாத்து வளர்த்து அம்மக்களின் நல்வாழ்விற்கு வழிவகுத்தலும், முதுமை, கடைசியாக, இவ்வுலகை விட்டும் மறைதல்.

இத்துடன் மனிதன் தன்னுடையது அனைத்தையும் முடித்துக் கொள்கிறானா என்றால் “இல்லவே இல்லை”. இவ்வுலக வாழ்க்கைக்கு அப்புறம் இன்னொரு உலக வாழ்க்கை இருக்கிறது. இவ்வுலக வாழ்க்கைக்கு பிறகு மனிதனின் அவ்வுலக வாழ்க்கை தொடர்கிறது. ‘சாவு’ என்பது இவ்வுலக வாழ்க்கையின் முடிவும் இன்னொரு வாழ்க்கையின் ஆரம்பமும்தான்.

மனிதனுக்கு இவ்வுலகில் அவனின் குடும்பத்தினர், உற்றார், உறவினர், ஊர்மக்கள், நாட்டு மக்கள் போன்ற பலரும், பணம், உறைவிடம், தொழில் நிறுவனங்கள், சொத்துக்கள், அவனுக்கு இன்பம் தரும் பொருட்கள், அவனை ஊக்குவிக்கும் பொருட்கள், உற்சாகப்படுத்தும் பொருட்கள் போன்ற பலவகையானவை இருக்கலாம். ஆனால், அவனை இரட்சித்துக் காப்பவன் அல்லாஹ் ஒருவனாகவே இருக்கிறான்.

அல்லாஹ் ஒருவனைத் தவிர அவனின் இதர மனிதர்களும், பொருள்களும், உபகரணங்களும், என்னேரத்தில் அவன் இறந்துவிடுகிறானோ அந்நொடிப் பொழுதிலேயே அவனைவிட்டும் அகன்று விடுகின்றன. அவன் தனிப்படுத்தப்படுகிறான். அவனுக்கு "பிரேதம்" – "மையத்" – என்ற பெயர் சூட்டப்படுகிறது. பிரேதமான அவனை யாரும் "மனிதன்" என்று சொல்வதில்லை. மனிதன் என்ற பெயர் அவன் இறந்த நேரத்திலேயே அவனைவிட்டும் பறந்தோடிவிடும்.

அவன் எவ்வளவு பெரிய பணக்காரனாக இருந்தாலும், பட்டம் பதவிகள் பெற்றவனாக இருந்தாலும் சரிதான். அவன் "பிரேதம்" – "மையத்" என்று தான் பேசப்படுகிறான். "மையத்தை" எத்தனை மணிக்கு எடுத்துச் செல்கிறார்கள்? என்று தான் மக்கள் கேட்பார்கள். "அம்மனிதனை எத்தனை மணிக்கு பள்ளிவாசலுக்கு தொழவைக்க கொண்டு செல்கிறார்கள்?" என்று எந்த ஒரு முட்டாளும்கூட விசாரிப்பதில்லை. மேலும் அவனைச் சார்ந்தவர்கள் மையத்தை அவன் வீட்டை விட்டும் எடுத்துச் சென்று "கப்று" என்னும் புதைக்குழியில் விரைவில் வைக்க வேண்டும் என்பதில் பெருமுயற்சி எடுப்பவர்களாக ஆகிவிடுகிறார்கள். அதிகநேரம் உயிரில்லா உடலை வைத்திருந்தால் துர்நாற்றம் எடுத்துவிடும்.

இந்நிலையில், மறு உலகப்பயணம் மேற்கொண்டிருக்கும் அவனுடன் சேர்ந்து செல்லுவார் யாரும் இல்லை. அல்லாஹ் ஒருவனைத் தவிர இவ்வுலகில் அவனுக்கும் மற்ற நல்லவர்களுக்கும், நல்லவர் அல்லாதவர்களுக்கும் என்றும்போல் பாதுகாவல் கொடுத்து வேண்டியன இவ்வுலகில் அளித்து வந்த அல்லாஹ் ஒருவன் மட்டும்தான் மறு உலகிலும் அவனுடன் செல்கிறான். அவன்தான் இவ்வுலகுக்கும் மறு உலகுக்கும் எசமான். (THE LORD OF THE PRESENT AND THE HEREAFTER) அத்தகைய எசமானனுக்கு அடிபணிந்து அவனை இறைஞ்சாது ஒரு மனிதன் இருப்பானாயின், அவன் தற்பெருமை கொண்டவன் என்றுதான் கணிக்கப்படுவான். தற்பெருமை நிச்சயம் அவனைச் சரிந்து விழச்செய்திடும் கீழ் நிலைக்கு கொண்டு போய்விடும்.

"உங்களைத் தாழ்த்திக் கொள்ளுங்கள்! நீங்கள் உயர்த்தப்படுவீர்கள்", என்னும் மாநபி (ஸல்) அவர்களின் பொன்மொழிக்கேற்ப மனிதன் அல்லாஹ்வின் உண்மையான அடிமை என்பதை மனநிறைவோடு ஏற்று அல்லாஹ்விடம் அவனின் தேவைகளுக்காக பணிவோடு இறைஞ்சிடின் அல்லாஹ் அவனின் பிரார்த்தனையைப் பரிவோடு கேட்கிறான்; அவனை மன்னிக்கிறான்; அவனுக்கு வேண்டிய நல்வழிகளை தெளிவாக காட்டுகிறான்.

உலகில் வாழும் மனிதர்கள் அனைவரும் பற்பல தேவைகளைப் பெற்றவர்களாகவே இருக்கிறார்கள். இவ்வுலகிலும் மறு உலகிலும் இனிய வாழ்வைப் பெற விரும்பும் ஒவ்வொருவரும் அவர்களின் தேவைகளை இனிது நிறைவேற்றிக் கொண்டாக வேண்டும். தேவைகள் நிறைவுற எல்லாம் வல்ல அல்லாஹ்வையே

இறைஞ்ச வேண்டும் என்று இஸ்லாம் கூறுகிறது. "உனது செருப்பின் வார் அறுந்து போனாலும் அதனை சீர் செய்து தரும்படி அல்லாஹ்விடம் வேண்டு", என்று அண்ணல் நபி (ஸல்) சொல்கிறார்கள்.

"என்ன இது? செருப்பின் வார் அறுந்து விட்டால் செருப்பு தைக்கும் செம்மானிடம் சென்று அதற்குரிய கூலியை கொடுத்து செருப்பினைச் சரியாக்கி கொண்டால் போச்சு; இதற்குமா அல்லாஹ்வை இறைஞ்ச வேண்டும்", என்று சாதாரண மனிதர்களில் சிலர் கேட்கலாம்.

அண்ட சராசரங்கள் அனைத்தையும் இயக்கிக் கொண்டிருக்கும் ஒப்பு உவமை இல்லா மாபெரும் சக்தி படைத்தவன் அல்லாஹ். அவனன்றி ஓரணுவும் அசையாது. செருப்பை சீர் செய்ய சக்தி அளிப்பவனும் அவன்தான். அல்லாஹ்விடம் உங்களின் வேண்டுதலை கொடுத்துவிட்டு செம்மானிடம் வார் அறுந்த செருப்பை சீர் செய்தீர்களென்றால் கோமான் நபி(ஸல்) அவர்களின் திருமொழியில் உள்ள சிறப்பை புரிந்து கொள்ள முடியும். அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்துவிட்டு சீர் செய்யப்படும் செருப்பின் உறுதித்தன்மை எப்படி இருக்கிறது. பிரார்த்தனையின்றி சீர் செய்யப்படும் செருப்பின் தன்மை எப்படி இருக்கிறது என்பதை உங்களின் அனுபவத்தில் கண்டு கொள்வீர்கள்.

இதைப் போன்ற நம் அனுபவங்களை உற்று நோக்குகையில் மனிதனுடைய தேவைகளை நோக்குகையில் மனிதனுடைய தேவைகளை சரியாக நிறைவேற்றி வைத்திட அல்லாஹ்வை அணுகுவதும் அவனைப் பணிவுடன் இறைஞ்சுவதும் அவசியமாகிறது என்பதை எளிதில் புரிந்த கொள்ளமுடியும்.

திருக்குர்ஆனை ஓதி அல்லாஹ்வை இறைஞ்சுதல்

அல்லாஹ்வை அணுகும் போது அவனின் திருமறை முழுவதையுமோ அல்லது அதிலுள்ள வசனங்கள் சிலவற்றையோ ஓதியபின் அல்லாஹ்வை இறைஞ்சுவது மிகவும் மேன்மை பயக்கும்; உடனடியான நற்பலனையும் நமது தேவைகளை விரைவில் நிறைவேற்றலையும் உண்டாக்கும். இதன் காரணமாகவே ஒவ்வொரு ரக்ஆத்திலும் ஓதியாக வேண்டும் என்று முஸ்லிம்கள் கட்டளையிடப்பட்டிருக்கிறார்கள்.

தொழுகையில் 'அல்ஹம்து' அத்தியாயம் ஓதப்படவில்லையாயின் அம்முஸ்லிமின் தொழுகை நிறைவேறியதாக ஆகாது. அவ்வத்தியாயம் ஓதப்படாத தொழுகை தொழுகையென கூறப்படமாட்டாது. தொழுகையில் கண்டிப்பாகச் செய்ய வேண்டியவற்றுள் (பர்ளு) அல்ஹம்து சூரா ஓதுவது அவசியத்திலும் அவசியமாக இருக்கிறது.

இமாம் அஹமது இப்னு ஹன்பல் (ரலி) அவர்கள் ஒரு நாள் ஒரு கனவு கண்டார்கள். அக்கனவில், "அல்லாஹ்வை விரைவிலும், எளிதிலும் அணுகுவதற்கு மற்றவைகளைவிடச் சிறந்தது திருக் குர்ஆனை ஓதி அல்லாஹ்வை இறைஞ்சுவதுதான்", என்று அவர்களுக்கு சொல்லப்படுகிறது".

"அவ்விதமே நற்பலனை பெறுவது திருகுர்ஆனின் அர்த்தத்தை தெரிந்து ஓதினால் மட்டும் தானா?," என்று அவர்கள் அக்கனவில் வினவுகிறார்கள். "திருகுர்ஆன் அர்த்தத்தை தெரிந்து ஓதினாலும் சரிதான்; அதன் அர்த்தத்தை தெரிந்திடாது ஓதினாலும் சரிதான்" என்று அவர்களுக்கு பதில் தரப்பட்டது.

கண்மணி நாயகம் (ஸல்) அவர்கள், "வீணை வாசிக்கிறவன் அவனுடைய வீணையளவில் செவி தாழ்த்துகிறதைவிடவும் திருகுர்ஆனை ஓதும் மனிதன் மீது அல்லாஹ் அதிகமாக செவி தாழ்த்துபவனாக இருக்கிறான்", என்று கூறியிருக்கிறார்கள்.

நோய் நீங்க திருகுர்ஆனை ஓதி வேண்டுதல்

உள்ளப்பிணிகள், உடற்பிணிகளை நீக்கவும் திருக் குர்ஆனை ஓதி அல்லாஹ்வை இறைஞ்சுதல் மிகவும் மேலானது.

"வனுனஸ்ஸிலு மினல் குர்ஆனி மாஹுவ ஷிபாஉவ் வரஹ்மதுன்லில் மூமினீன். வலா யஸீதுள் ளாலிமீன இல்லா கஸாரா."

"நன்னம்பிக்கை கொண்டவர்களுக்கு அருளாகவும் அரும் மருந்தாகவும் உள்ளவற்றையே குர்ஆனில் நாம் இறக்கியிருக்கிறோம். ஆனால் அக்கிரமக்காரர்களுக்கு (இது) நஷ்டத்தை தவிர வேறெதையும் (இது) அதிகமாக்கிறது இல்லை என்று எல்லாம் வல்ல அல்லாஹ் தனது திருமறையில் கூறுகின்றான். (திருக்குர் ஆன் 17:32)

திருநபி (ஸல்) அவர்களிடம் ஒருநாள் தன் குழந்தையைக் கையில் எடுத்துக் கொண்டு ஒரு பெண்மணி வந்தாள். "அல்லாஹ்வின் திருத்தூதர் அவர்களே! என் குழந்தைக்கு அடிக்கடி மயக்கம் ஏற்படுகிறது. இதனால் நான் மிகவும் வருந்தியவளாக இருக்கின்றேன். அவளின் மயக்கம் நீங்கிட அல்லாஹ்விடம் துஆச் செய்யுங்கள்," என்று பணிவுடன் வேண்டினாள்.

நபிகள் நாதர்(ஸல்) அவர்கள் "வனுனஸ்ஸிலு மினல் குர்ஆனி மாஹுவ ஷிபாஉவ் வரஹ்மதுன்லில் மூமினீன்" என்னும் திருவசனத்தை ஓதி அக்குழந்தையின் மீது ஊதி துஆச் செய்தார்கள். அக்குழந்தையின் மயக்கம் உடன் நீங்கிவிட்டது.

நோய்கள் நீங்க டாக்டர்களிடமும், பரிகாரிகளிடமும், வேறுபல நூதன முறைகளிலும் சிகிச்சை செய்து அந்நோய் நீங்கப் பெறாது துன்புறும் நோயாளிகளின் மீது சில திருக் குர்ஆன் வசனங்களை ஓதி ஊதுவதினால் நோய் குணம் பெறுவதை தமது வாழ்நாட்களில் கண்கூடாக காண்கிறோம். நமது பள்ளிவாசல்களின் முன்னால் அதிகாலை தொழுகைக்குப் (சுபுஹு) பின்னரும் சூரியன் மறைந்தபின் தொழுதிடும் (மஃரிபுத்) தொழுகைக்கு பின்னரும் நோயாளிகள் வரிசை வரிசையாக நிற்பதையும் தாய்மார்கள் நோய்வாய்ப்பட்ட தங்கள் குழந்தைகளுடன் வரிசை வரிசையாய் நிற்பதையும், தொழுகையை நிறைவேற்றியபின் வெளியில் வருபவர்கள் பள்ளிவாசலின்

முன்னால் நிற்பவரின் மீது ஓதி ஊதுவதால் யாருக்கும் கட்டுப்படாத மன நோய்களும், உடற்பிணிகளும் மாயமாய் மறைந்து அவர்கள் மகிழ்ச்சியுறுவதையும் நாம் கண்களால் பார்க்கிறோம். இவ்விதம் நோய் நீங்கப் பெறுபவர்களின் கூட்டம் பள்ளி வாசல்களின் முன்னால் நாளுக்குநாள் அதிகமாகிக் கொண்டிருக்கிறது.

ஸ்பெயின் நாட்டில் 'குர்னாதாஃ' என்னும் இடத்திற்கு அருகில் ஒரு மனோதத்துவ சிகிச்சை நிலையம் இருக்கிறது. இச்சிகிச்சை நிலையம் இலவசமாக இரண்டு மனோதத்துவ நிபுணர்களால் நடத்தப்படுகிறது. இதனை நடத்துபவர்கள் புதிதாக இஸ்லாத்தை தழுவியுள்ள டாக்டர். மன்சூர் அப்துஸ்ஸலாம், டாக்டர். அபூதாரிக் ஆகிய இருவருமாவர். இங்கு இலவசமாக திருகுர்ஆன் வழிச் சிகிச்சை தரப்படுகிறது.

தங்களிடம் சிகிச்சைக்கு வரும் நோயாளிகளுக்கு, அவர்களின் நோய்களுக்கு ஏற்ற திருகுர்ஆன் வாக்கியங்களை இந்த டாக்டர்கள் எடுத்தோதுகிறார்கள். நோயாளியை அவர்களின் ஓதலை ஆழ்ந்து காதுதாழ்த்தி கேட்குமாறு சொல்கிறார்கள். இவர்களின் திருகுர்ஆன் ஓதுதல் நோயாளிகளுக்கு ஆன்ம திருப்தியை அளிக்கிறது. நோயாளிகளின் நோய்கள் பறந்தோடுகின்றன. இவ்விதம் பல்லாண்டுகளாக மதுவருந்தும் பழக்கமுள்ள பலரையும் கூட இந்த டாக்டர்கள் அவர்களின் திருகுர்ஆன் வழி சிகிச்சை முறையால் மதுவருந்தும் தீயபழக்கத்தை ஒழித்து புத்துயிர் பெறச் செய்திருக்கிறார்கள். இவர்களின் சிகிச்சை முறையில் ஒருநாளும் தோல்வி கண்டதில்லை என்று இந்த டாக்டர்கள் உறுதியாக சொல்கிறார்கள். அல்ஹம்துலில்லாஹ்! (எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!).

பேய், பிசாசு போன்ற உபாதைகளை நீக்கல்

திருகுர்ஆன் ஓதுவதால் மனிதனைத் துன்புறுத்தும் மனநோய்கள், உடற்பிணிகள் முதலியவற்றைச் சுகம் பெற செய்வதுடன், பேய், பிசாசு, ஜின்போன்ற தொல்லைகளும் அகன்றுவிடும். எதிரிகளால் செய்யப்பட்ட வஞ்சனை, சூனியம் போன்ற இடுக்கண்களும் நீங்கும். கண்திருஷ்டி (EVIL EYED DEFECTS) போன்றவற்றால் ஏற்பட்ட உபாதைகளும் விலகும். இன்னும், இவ்வுலகிலும், மறு உலகிலும் நாம் நிறைவேற்றிக் கொள்ளவிரும்பும் நமது நாட்டங்கள் அனைத்தையும் திருகுர்ஆனை ஓதி இறைஞ்சுவதால் அல்லாஹ் இனிது நிறைவுற செய்கிறான்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கனவில் காணல்

இரு உலக காப்பாளர், ஏகனின் திருத்தூதர், எங்கள் நாயகம் (ஸல்) அவர்களைக் கனவில் காணத் துடிக்கும் உண்மை முஸ்லிம்கள் பலர் இருக்கிறார்கள்; இருந்திருக்கிறார்கள். அல்லாஹ்வின் உண்மை அடியார்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களை உள்ளம் மகிழ கனவில் கண்டிருக்கிறார்கள். முகையித்தீன் அப்துல் காதிருல் ஜெய்லானி (ரலி), ஷாஹ் சிந்தாமதார் (ரலி), காஜா முஈனுத்தீன் ஜிஸ்தீ (ரலி),

'நாகூர் ஆண்டகை' அப்துல் காதிர் 'ஷாஹூல் ஹமீது (ரலி), மாதிஹுர் ரசூல்' போன்ற இறைஞானிகள் பலதடவை திருநபி (ஸல்) அவர்களைத் தங்களின் கனவுகளில் கண்டிருப்பதாக அவர்களின் வரலாறுகள் எடுத்தோதுகின்றன.

'மிஃறாஜு மாலை' பாடிய நெல்லை கட்டபொம்மன் மாவட்டம், பாளையங்கோட்டை பேருந்து நிலையத்துக்கு எதிர்புறமுள்ள பாளையங்கால் கரையில் அடங்கியிருக்கும் ஆலியப்பா புலவர் (ரஹ்) அவர்கள் தமது மிஃறாஜு மாலையை அரங்கேற்றுகையில் திருநபி (ஸல்) அவர்கள் நேரில் தோன்றி அந்நூல் முழுவதையும் கேட்டதாககவும், புலவரோடு உரையாடியதாகவும், அதன்பின் 'திருநபி (ஸல்) அவர்களைக் கண்டபின் யாரையும் எனது கண்களால் காணமாட்டேன்' என்று கூறி ஆலியப்பா புலவர் (ரஹ்) தமது கண்கள் இரண்டையும் வாழ்நாட்கள் முழுவதும் மறைத்துக் கொண்டதாகவும் வரலாறு கூறுகிறது.

ஆலியப்பா புலவர் (ரஹ்) மட்டுமல்ல; நபிகள் நாயகத்தை கனவில் கண்ட 'சீறாப்புராணம்' பாடிய உமறுப்புலவர் (ரஹ்), காயல்பட்டிணத்தில் அடக்கமாகியிருக்கும் 'வரகவி' காசிம்புலவர் (ரஹ்) போன்ற பல புலவர்கள் இறைஞானிகள் நமது தமிழ்நாட்டில் வாழ்ந்திருக்கிறார்கள். உலக முஸ்லிம்களின் வரலாற்றைப் புரட்டினால் உலகின் பல பகுதிகளிலும் இறையன்பர்களுக்கு மதீனா மாநகரில் வாழ்ந்து வரும் காரண நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டுதல்கள் அவ்வப்போது இருந்து வந்திருப்பதை அறியமுடியும்.

மிகுந்த இறைவணக்கம், சலவாத்துகளை அதிகமாக ஓதுதல், திருகுர்ஆனை ஓதுதல், கவிகளைப் பாடுதல் போன்றவற்றால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கனவில் காணும் வாய்ப்பினை இறையன்பர்கள் பெற்றிருக்கிறார்கள் என்று நாம் அறிகிறோம். இவற்றுள் திருகுர்ஆன் முழுவதையுமோ அல்லது திருகுர்ஆனின் சில வாக்கியங்களையோ முறைப்படி ஓதுவோர்க்கு நபி பெருமானார் (ஸல்) அவர்களை கனவில் காணுவது எளிதரகவும், கைமேல் பலனளிக்கக்கூடியதாகவும் இருப்பதாக அறிஞர்கள் கூறுகின்றனர்.

இந்நூலில் சூராமுஸம்மிலை ஓதி நபிகள் கோமான் (ஸல்) அவர்களை கனவில் காணுவதைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது.

முஸம்மில் ஸூரா

'முஸம்மில் சூரா' – 'சூரத்துல் முஸம்மில்' எனப்படுவது திருகுர்ஆனின் 73–வது அத்தியாயம். நபிபெருமான் (ஸல்) அவர்களுக்கு இஸ்லாத்தின் ஆரம்பகாலத்தில் மக்காவில் இறக்கப்பட்ட அத்தியாயங்களில் இதுவும் ஒன்று. இவ்வத்தியாயம் நபிகள் நாதர் (ஸல்) அவர்கள் "மதீனாவுக்கு 'ஹிஜ்ரா' போவதற்கு 11–லிருந்து 10–ஆண்டுக்குமுன் அவர்களுக்கு இறங்கியிருக்கலாம் என்று நாம் ஒருவாறு

கூறலாம்" என மௌலான அப்துல்லா யூசுப் அலி அவர்கள் தமது திருகுர்ஆன் ஆங்கில மொழிபெயர்ப்பில் எழுதியிருக்கிறார்கள்.

இறைநேசச் செல்வர்களில் பலர் முஸம்மில் சூராவை தினமும் ஓதும் பழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். இதனை ஓதுவதனால் உண்டாகும் பலன்கள் அனைத்தையும் அல்லாஹ் ஒருவனே அறிவான். வேறுயாரும் அளவிட்டுக்கூறும் சக்தி பெறமாட்டார்கள். எழுதும் திறனும் யாருக்கும் கிடையாது. இருப்பினும், "முஸம்மில் சூராவின் 70 பலன்"களை மட்டும் வரிசைப்படுத்தி எழுதி இந்நூலை வெளியிடுகிறேன்.

சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்பதாக அரபுத் தமிழில் கையெழுத்துப்பிரதியாக எழுதப்பட்ட எனது மூதாதையரின் நூல்களோடு வைக்கப்பட்டிருந்த ஒரு கிதாபில் எழுதப்பட்டவைகளை ஆதாரமாகக் கொண்டு இந்நூலை எழுதத் தொடங்கினேன். இதில் வேறு நூல்களில் கண்ட சிலவற்றையும் இணைத்திருக்கிறேன். இந்நூலில் எழுதப்பட்டுள்ளவை அனைத்துக்கும் ஆதாரங்கள் இருக்கின்றன; ஆதாரமற்ற எதையும் இதில் நான் எழுதவில்லை.

இந்நூலில் எழுதப்பட்டுள்ளவைகளை இதில் எழுதப்பட்டபடி ஓதுவதற்கும், செயலாற்றுவதற்கும் அசையாத உறுதிப்பாடும், நம்பிக்கையும் தேவைப்படுகிறது. எவ்வித அவநம்பிக்கையும், சந்தேகமும் கொள்ளுதல் கூடாது. முஸம்மில் சூரா அல்லாஹ்வால் நபிகள் நாதர் (ஸல்) அவர்களுக்கு இறக்கி வைக்கப்பட்டது. இது கைகூடுமோ, கூடாதோ என்று ஐயப்படல் வரப்போகும் வெற்றியை ஒருவேளை தள்ளி வைக்கும்; அல்லது தவிர்த்துவிடும். எவ்வளவுக்கெவ்வளவு நம்பிக்கையுடனும், உறுதிப்பாட்டுடனும் நாம் செயல்படுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு எளிதாகவும், விரைவாகவும், நல்ல முறையிலும் 'முஸம்மில் சூரா'வின் பரக்கத்தால் வெற்றியைத் தக்க வைக்கமுடியும், இன்ஷா அல்லாஹ்.

இதில் சொல்லப்பட்டவைகளை நம்பாதவர்களும் இதைப்பற்றி அப்படி இப்படி என்று பேசுபவர்களும் சிலர் இருக்கலாம். அவர்களிடம் தயவுசெய்து விவாதம் செய்யவேண்டாம். அவர்களை அவர்களின் வழியிலேயே விட்டுவிடுங்கள். 'விவாதம் பண்ணுவதனால் எவ்வித நற்பலனையும் பெறமுடியாது' என்று உளநூல் வல்லுனர் கூறுவர்.

'முஸம்மில் சூராவை' கிப்லாவை (நாம் தொழும் திசையினை) நோக்கியிருந்து ஓதவும்.

இதனை ஓதுவதற்கு முன்பதாக குறைந்தது 3 சலவாத்துகளும், இதனை ஓதிமுடித்தபின் 3 சலவாத்துகளும் ஓதிக்கொள்ளல் நன்று.

முஸம்மில் ஸூராவின் 70 பலன்கள்

1. தினமும் வழமையாக ஒரு மனிதன் 'சூரா முஸம்மிலை' தொடர்ந்து ஓதி வந்தால் இம்மையிலும், மறுமையிலும் அவனுக்கு எவ்வித இன்னல்களும் வராது அல்லாஹ் அவனைக் காத்தருள்வான் என்று நபிகள் நாதர் (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

2. இதனை வழக்கமாக தினந்தோறும் ஓதி வருபவர் இன்ஷா அல்லாஹ் பெருமானார் (ஸல்) அவர்களை தமது கனவில் காணும் பாக்கியத்தை பெறுவர்.

3. ஒரு மனிதன் ஒரு காரியத்தில் முயற்சியினை மேற்கொள்கிறான். அவன் மேற்கொண்டிருக்கும் காரியம் நல்ல காரியம் தான் இருந்தும்; அவன் எடுக்கும் முயற்சிகளெல்லாம் தோல்வியுறுகின்றன என்றால், அவன் தினமும் 3 தடவை சூரா முஸம்மிலை ஓதி தனது முயற்சியில் வெற்றியருளும்படி அல்லாஹ்விடம் துஆக் கேட்கவும் அவனது காரியத்தை அல்லாஹ் அவனுக்கு வெற்றியாக்கித் தருவான், இன்ஷா அல்லாஹ்.

4. ஒரு மனிதன் தன் கைவசம் வைத்திருந்த பணம் ஏதோ ஒரு காரணத்தின் நிமித்தம் அவனை விட்டும் போய்விட்டது. அவன் கஷ்டநிலையில் இருக்கிறான். அப்படிப்பட்டவன் 40 தடவை தினமும் இதனை ஓதி வர வேண்டும். அவ்விதம் ஓதினால் அம்மனிதனில் கையை விட்டும் போன முதலை இன்ஷா அல்லாஹ் அவன் திரும்பப் பெறுவான்.

5. ஒரு மனிதன் தனது ஊரைவிட்டும் பயணம் புறப்படுகிறான். அவன் புறப்பட்டுபோய் பல நாட்கள் ஆகிவிட்டன. இன்னும் அவன் திரும்ப வரவில்லை. அவன் எங்கு இருக்கிறான் என்பது தெரியவில்லை. அவன் உயிரோடு இருக்கிறானா அல்லது இறந்து விட்டானா என்பதையும் சரியாக அறிந்து கொள்ள முடியவில்லை. இந்நிலையில் அம்மனிதனைப் பற்றி அறிய விரும்பினால், ஒரு வெள்ளிக்கிழமை இரவில் குளித்து, துப்புரவான உடையணிந்துக் கொண்டு அம்மனிதன் எங்குயிருக்கிறான், அவனது நிலையென்ன என்பது தனக்கு அறிவிக்கப்படவேண்டும் என்ற எண்ணத்தோடு 'முஸம்மில்' சூராவை 40 விடுத்தம் ஓதி தனது நாட்டத்தை நிறைவேற்றி வைக்கவேண்டி அல்லாஹ்வை வேண்டியவனாக தூங்கினால் இன்ஷா அல்லாஹ் அவனது கனவில் பயணம் போன மனிதனைப் பற்றிய விவரத்தை தெரிந்து கொள்ளலாம்.

6. இதனை வழமையாக ஓதும் பழக்கமுள்ளவர்க்கு இன்ஷா அல்லாஹ் அவர் நாடும் அனைத்து நற்காரியங்களும் கைகூடும்.

7. எந்த நல்ல நாட்டத்தை மனத்தில் வைத்துக்கொண்டு இதனை ஓதினாலும் இன்ஷா அல்லா அந்நாட்டம் நிறைவு பெறும்.

8. கடன் ஏற்பட்டு, அக்கடனை தீர்க்க, எவ்வித வாய்ப்பும் இல்லையாயின், ஒவ்வொரு நாளும் இஷா தொழுகைக்குப் பிறகு 10 விடுத்தம் இதனை 'தனது கடன்கள் முழுவதும் நீங்க வேண்டும்' என்ற எண்ணத்தை மனதில் பதிய வைத்தவனாய் இதனை 40 நாளைக்கு ஓதி வந்தால் இன்ஷா அல்லாஹ் அவனின் அறியாப்புறத்தால் அவனின் கடன்கள் தீர்ந்துவிடும்.

9. ஒருவனுக்கு மிடுமை (தரித்திரியம்) ஏற்பட்டு அதனால் அவன் வாழ்வில் துன்பங்களை அனுபவித்து வந்தால் 'அஸர்' தொழுகைக்குப் பின்னர் இதனை 7 விடுத்தம் ஆதி துஆக் கேட்கவும் இன்ஷா அல்லாஹ் மிடுமை நீங்கி செல்வம் பெருகும்.

10. யாதாவது ஒரு சிக்கலில் மாட்டிக்கொண்டு அல்லல்படுவர். முஸம்மிலை ஓதினால் அல்லல்கள் அகன்று சிக்கலிலிருந்து மீட்சி உண்டாகும்.

11. வெளியூர் பயணம் சென்று திரும்பாதிருந்து அவரைப் பற்றிய துப்பு (தகவல்) ஒன்றும் தெரியாதிருந்தால் 40 நாளைக்கு இதனை ஒவ்வொரு நாளும் 40 விடுத்தம் வீதம் ஓதி வந்தால் அவரைப் பற்றிய விவரங்கள் இன்ஷா அல்லாஹ் தெரியவரும்.

12. ஒருவன் எல்லாக் காரியங்களிலும் தோல்வியையே சந்தித்துவந்தால் 40 நாளைக்கு தினமும் 40 விடுத்தம் இதனை ஓதி வரவும். இன்ஷா அல்லாஹ் அவனது தோல்வி நிலைமாறி எல்லாக் காரியங்களிலும் ஜெயம் கிடைக்கும்.

13. துன்பங்கள் நேரும்போது இதனை 7 தடவை ஓதி துஆக் கேட்டால், துன்பங்கள் இன்ஷா அல்லாஹ் அகன்று இன்பம் உண்டாகும்.

14. தினமும் 40 முறை 40 நாட்களுக்கு ஓதி வந்தால் இன்ஷா அல்லாஹ் அவன் நினைத்த காரியங்கள் எல்லாம் வெற்றியாகும்.

15. ஒருவன் அநியாயக்கார அரசன், கெடுதல் தரும் அதிகாரி, துர்க்குண முள்ளவன் முதலியவர்களிடம் எதன் நிமித்தமாவது போக நேர்ந்தால், இதனை ஓதிவிட்டு போகவும். இன்ஷா அல்லாஹ் அவர்கள் எவ்வித தீங்கும் இவனுக்கு செய்யமாட்டார்கள்.

16. இதனை வழமையாய் தினமும் ஓதிவருபவர் எப்போதும் மகிழ்ச்சியாகவே காணப்படுவார்.

17. யாதொரு அடிமை அல்லது வேலைக்காரன் எங்கேயாவது ஓடிப்போய் விட்டால் இதனை 40 நாளைக்கு தினமும் 10 விடுத்தம் வீதம் அவன் திரும்பி வரவேண்டும் என்ற எண்ணத்தில் ஓதினால் ஓடிப்போனவன் இன்ஷா அல்லாஹ் திரும்பி வந்துவிடுவான்.

18. போர்க்களத்திற்கு செல்லுபவர் இதனை ஓதிக்கொண்டு சென்றால், அவர் வெற்றியுடனேயே திரும்பி வருவார்.

19. மனதில் சலிப்பு, கவலை, விசாரம் முதலியன வந்தால் இதனை ஓத அவை பறந்தோடிவிடும்.

20. பிரயாணம் செல்லுபவர் இதனை ஓதினால், இன்ஷா அல்லாஹ் பயணம் சிறப்பாக அமையும், அவர் ஸலாமத்தாக தமது ஊருக்கு திரும்பி வருவார்.

21. தன்மீது எல்லோரும் முஹப்பத் வைக்க நாடுபவர் வீட்டைவிட்டு வெளியில் செல்லும்போது இதனை ஓதிக் கொண்டு செல்லவும்.

22. பலாய், முஸிபத்துகள் ஏற்பட்டு அவனை விட்டும் நீங்காது தொடர்ந்து தொல்லை கொடுத்துக் கொண்டு வந்தால் அவை முற்றும் நீங்க வேண்டும் என்ற உறுதியான எண்ணத்துடன் தினமும் ஓதி வரவும். இன்ஷா அல்லாஹ் அவை நீங்கிவிடும்.

23. சுபுஹு தொழுகைக்கும், மஃரிபு தொழுகைக்கும் பின்னர் தினமும் ஒருவர் ஓதிவந்தால் அல்லாஹ் அவருக்கு ரஹ்மத் செய்வான்.

24. வியாபாரம் செழித்தோங்க விரும்பின் தினமும் இரவில் தூங்கச் செல்கையில், ஒரு தடவை இதனை ஓதிவரவும்.

25. தாய், தகப்பன் பேரில் இதனை ஓதி அவர்களின் மக்பிரத்துக்காக அவர்களின் மீது ஹதியாச் செய்வது மிகுந்த நன்மையைத் தரும்.

26. இதனை தினமும் 7 தடவை ஓதினால் இன்ஷா அல்லாஹ் செல்வம் பெருகும்.

27. மேகவெட்டை, வெண்குட்டம் உள்ளவர்கள் தினமும் 40 நாட்களுக்கு 40 தடவை அல்லாஹ்வை நாடி அவர்கள் நோய் நீங்குமாறு ஓதி வந்தால் இன்ஷா அல்லாஹ் அவை நீங்கிவிடும். இதனை அனுபவத்தில் பலர் கண்டு இருக்கிறார்கள்.

28. இதனை ஓதிக்கொண்டு அதிகாரிகளிடம் செல்லில் அவர்கள் அன்புடன் நடந்து கொள்வர்.

29. தினமும் 7 தடவை ஓதிவரின் இன்ஷா அல்லாஹ் உணவுக் கஷ்டம் மாறும்.

30. வேலை கிடைக்காது துன்புறுபவர் தனக்கு, இதனை தினமும் தமக்கு தகுதியான வேலை கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் ஓதி துஆக் கேட்டால், இன்ஷா அல்லாஹ் விரைவில் அவரின் தகுதிக்கேற்ற வேலை கிடைக்கும்.

31. தொழிலில் போதிய வளர்ச்சியில்லாது வாடுபவர் இதனை ஓதி வந்தால் இன்ஷா அல்லாஹ் விரைவில் அவர் செய்யும் தொழில் உயர்வடையும்.

32. "யாமுஃனி" என்னும் இஸ்மை 1100 தடவையும், முஸம்மில் சூராவை 40 தடவையும் தினமும் ஓதிக்கொண்டு வந்தால் இன்ஷா அல்லாஹ் மறைமுகமாகவும் வெளியரங்கமாகவும் 'ரிஸ்க்' (கிரணம்) அவனுக்கு வரும். (40 தடவை ஓத இயலாதவர் 11 தடவை ஓதினால்போதும்).

33. தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் கீழ்க்கண்ட முறையில் 40 நாட்களுக்கு இதனை ஓதி வந்தால் வறுமை ஒழிந்து செல்வம் பெருகும். இதனை அனுபவத்தில் பலர் கண்டிருக்கிறார்கள்.

34. அவ்வியாக்கள், ஒலிமார்கள் முதலிய ஆன்மீகப் பெரியார்களின் கபுறு ஷரீபுக்குச் சென்றால் "யாஸீன்" சூரா 1 விடுத்தமும், முஸம்மில் சூரா 1 விடுத்தமும்

ஓதி ரசூல் (ஸல்) அவர்களுக்கு அன்பளிப்புச் செய்வது மிகுந்த நற்பலன்களைத் தரும் என்று சில ஷெய்குமார்கள் கூறுகின்றனர்.

35. யாதொரு குழந்தை அல்லது சிறு பிள்ளை பயந்து அழுதால் இதனை அக்குழந்தை அல்லது அச்சிறு பிள்ளையின் மீது ஓதி ஊதவும். இன்ஷா அல்லாஹ் திடுக்கம், பயம் முதலியன நீங்கும்.

36. ஷெய்த்தான் பிடித்தவர்களுக்கு முஸம்மில் சூராவை ஓதி ஊதவும். இன்ஷா அல்லாஹ் ஷெய்த்தான் விலகி விடுவான்.

37. அரசர்கள், பெரும்பதவி வகிப்பவர்கள், உத்தியோகஸ்தர்கள், பணக்காரர்கள், முதலியவர்களைக் காணச் செல்லுகையில் இதனை ஓதி தண்ணீரில் ஊதி, அத்தண்ணீரினால் முகத்தைக் கழுவிக்கொண்டு போனால், அவர்கள் இவ்விதம் செல்லுபவரின் மீது மிகவும் பிரியம் கொள்வார்கள்.

38. தன் கணவன் தன்னை வெறுத்திருந்தால் இதனை 7 விடுத்தம் ஓதி, கையில் ஊதி முகத்தில் தடவிக்கொண்டு தனது கணவனின் முன் சென்றால், அவருக்கு இவளின் மீது இருந்துவந்த வெறுப்புமாறி இவள்மீது மிகுந்த முஹப்பத்துண்டாகும்.

39. யாதொருவனுக்கு உள்ளத்தில் பயம், நடுக்கம் உண்டாயிருந்தால் இதனை ஓதி தண்ணீரில் ஊதி, அத்தண்ணீரை அவனின் முகத்தில் எறியவும். இன்ஷா அல்லாஹ் பயம், நடுக்கம் நீங்கிவிடும்.

40. தினமும் 40 விடுத்தம் இதனை ஓதி, தண்ணீரில் ஊதி, தனது உடல் முழுவதும் தேய்த்துக் கொள்ளவும். இவ்விதம் 40 நாட்களுக்கு செய்து முடித்தால் அவன் தொடும் எல்லாக்காரியங்களிலும் பரக்கத் உண்டாகும்.

41. ஒருவன் குளிரினாலும், காய்ச்சலினாலும் துன்புற்றால் அவன் மீது இதனை ஓதி ஊதவும். இன்ஷா அல்லாஹ் குளிர், காய்ச்சல் சுகமாகும்.

42. ஒருவனுக்கு தான் இருக்குமிடத்தில் இருக்க பயமாக இருந்தால் இதனை ஓதி, தண்ணீரில் ஊதி, அவன் இருக்கும் இடத்தில் 4 மூலைகளிலும் அந்த தண்ணீரை தெளிக்கவும். பயம் அகன்று விடும்.

43. வெண்குட்டம், கருங்குட்டம் கண்டால் இதனை ஓதி, தண்ணீரில் ஊதி, நோய்கண்ட இடத்தில் நன்கு படும்படி ஊற்றவும். இவ்விதம் 40 நாட்களுக்கு செய்து வரவும். இன்ஷா அல்லாஹ் அந்நோய்கள் குணமாகும்.

44. ஒரு பெண், பிள்ளைப்பெற கஷ்டப்பட்டால், இதனை ஓதி, அவளின் உச்சி முதல் உள்ளங்கால்வரை ஊதவும். இன்ஷா அல்லாஹ் எளிதில் பிள்ளைப் பெறுவாள்.

45. அரையாப்புக் கட்டி (BUBO) உண்டானால் மண்கட்டி கொண்டுவந்து அதனை உடைத்து தண்ணீர் விட்டு குழைத்து, முஸம்மில் சூராவை அதில் ஓதி ஊதி, அக்கட்டியில் வைத்துக்கட்ட, இன்ஷா அல்லாஹ் அக்கட்டி கரைந்துவிடும்.

46. தலைமுடி கழிந்து கொண்டுவந்தால் 40 நாட்களுக்கு இதனை தண்ணீரில் ஓதி ஊதி, தலையில் எல்லா இடங்களிலும் படும்படி சொரியவும். சுகம் கிடைக்கும் இன்ஷா அல்லாஹ்.

47. வஞ்சனை, சூனியம் பிடித்தவர்களுக்கு இதனை 40 விடுத்தம் ஓதி, தண்ணீரில் ஊதி, அத்தண்ணீரை வஞ்சனை, சூனியம் பிடிக்கப்பட்டவரின் தலையில் சொறியவும். இன்ஷா அல்லாஹ் வஞ்சனை, சூனியத்தினால் ஏற்பட்டுள்ள எல்லா தீங்குகளும் நீங்கி சுகம் ஏற்படும்.

48. யாதொருவனுக்கு பாம்பு, தேள் முதலிய விஷ சந்து தீண்டினால் இதனை

ஓதியவண்ணம் வேப்பங்குளையால் விஷசந்து தீண்டிய இடத்தில் அடித்துக் கொண்டிருந்தால் இன்ஷா அல்லாஹ் விஷம் இறங்கிவிடும்.

49. வாயுத் தொல்லையால் துன்புறுபவர்களுக்கு இதனை பீங்கான் தட்டில் எழுதி கரைத்துக் கொடுக்க இன்ஷா அல்லாஹ் வாயு உபாதை குணமாகும்.

50. தவறான நட்பு ஒரு ஆணுக்கும், பெண்ணுக்கும் ஏற்பட்டிருந்து, நன்மையைக் கருதி அவர்கள் இருவரையும் பிரிக்க நினைத்தால் இதனை ஒரு ரொட்டியில் எழுதி நாயிக்கு தின்னக் கொடுக்கவும். இன்ஷா அல்லாஹ் அவ்விருவருக்கும் பிரிவினை ஏற்படும்.

51. சில பெண்களுக்கு பிள்ளை உண்டாகாது மாதா மாதம் மாதவிடாய் வந்துவிடும். வேறுசில பெண்கள் கர்ப்பமுறுவர்; ஆனால் கர்ப்பமுற்றிருக்கையில் மாதவிடாய் வந்துவிடும். இத்தகைய பெண்களை நோன்பு பிடிக்கச் சொல்ல வேண்டும். முஸம்மில் சூராவை 7 விடுத்தம் ஓதி, சீனியில் (Sugar) ஊதி, அவளிடம் கொடுத்து, அதைக்கொண்டு அவளை நோன்பு திறக்கச் சொல்லவேண்டும். இன்ஷா அல்லாஹ் விரைவில் கர்ப்பமுறுவாள்.

52. முஸம்மில் சூராவை தாயத்து அடைத்து அணிந்து கொண்டால் எவ்வித பலாய், முஸீபத்தும் இன்ஷா அல்லாஹ் அணுகாது.

53. கணவனுக்கும், மனைவிக்கும் ஒற்றுமையின்றி பிணக்கு ஏற்பட்டிருந்தால் இதனை பீங்கான் தட்டில் 7 நாட்களுக்கு எழுதி கரைத்து அவ்விருவரையும் குடிக்கச் செய்ய வேண்டும். இன்ஷா அல்லாஹ் அவ்விருவரும் முகப்பத்தாவர்.

54. ஒருவன் துட்டர்களுடன் (துஷ்டர்களுடன்) பழகுவதை நிறுத்த விரும்பின் அவனுக்கு இதனை பீங்கான் தட்டில் எழுதி கரைத்துக் கொடுக்கவும். துட்டர் சகவாசத்தை விட்டும் இன்ஷா அல்லாஹ் அவன் நீங்கிவிடுவான்.

55. யாதொரு அரசன் அல்லது மேலதிகாரி உன்னுடன் மகிழ்ச்சியோடு பழகவேண்டுமென்று நீ விரும்பினால், குங்குமம், கஸ்தூரி இரண்டையும் பன்னீரில் கரைத்து அதனைக் கொண்டு முஸம்மில் சூராவை எழுதி, தாயத்து அடைத்து நீ அணிந்து கொண்டால் முஸம்மில் சூராவின் பரக்கத்தினால் அவர்கள் இன்ஷா அல்லாஹ் எப்போதும் மகிழ்ச்சியுடன் பழகுவர்.

56. பிள்ளை இல்லாதவர்களுக்கு இதனை பீங்கான் தட்டில் எழுதி 11 நாட்களுக்கு தொடர்ந்து கொடுக்க இன்ஷா அல்லாஹ் அவள் குழந்தை உண்டாகுவாள்.

57. மாதத்துக்கு ஒரு தடவைக்கு மேலாக மாதவிலக்கு வந்து துன்புறுபவர்களுக்கும், தொடர்ந்து மாதவிடாய் இருந்துக் கொண்டிருப்பவர்களுக்கும் இதனை எழுதி தாயத்து அடைத்து அவளை அவளின் உடலில் அசுத்தம் படாத இடத்தில் கட்டிக் கொள்ளச் செய்ய அவ்உபாதை இன்ஷா அல்லாஹ் நீங்கிவிடும்.

58. திருகுர்ஆன் பாடம் வாரதவர்களுக்கும், ஞாபக சக்தி குறைந்தவர்களுக்கும் இதனை பீங்கான் தட்டையில் எழுதி கரைத்துக் கொடுக்க இன்ஷா அல்லாஹ் திருகுர்ஆன் பாடம் நன்கு வரும். ஞாபக சக்தி (MEMORY POWER) அதிகரிக்கும்.

59. பிள்ளையில்லாப் பெண்டிற்கு பிள்ளை உண்டாக அவளை நோன்பு பிடிக்கச் சொல்ல வேண்டும். அத்துடன் புதுப்பானை ஒன்றைக் கொண்டுவந்து அதில் தண்ணீரை நிரைத்து அத்தண்ணீரில் முஸம்மில் சூராவை 40 விடுத்தம் ஓதி ஊதி திங்கட்கிழமை பொழுது உதயமாகும் (சூரியன் உதிக்கும்) நேரம், அவளை சுத்த தண்ணீரை அவளின் உச்சி முதல் உள்ளங்கால்வரை எல்லா இடங்களிலும் படும்படியாக ஊற்றிக் கொள்ளச் சொல்ல வேண்டும். இவ்விதம் மூன்று திங்கட்கிழமைகளுக்கு தொடர்ந்து செய்துவந்தால், இன்ஷா அல்லாஹ் அவளின் மலட்டுத்தன்மை நீங்கி கர்ப்பமுறுவாள்.

60. யாருக்காவது வஞ்சனை, சூனியம் செய்யப்பட்டு அதனால் உபாதைகள் உண்டாகி எவ்வித பரிகாரத்தினாலும் அவ்உபாதைகள் தீராது துன்பப்பட்டுக் கொண்டிருந்தால், கீழ்க்கண்டவாறு செய்யவும். இன்ஷா அல்லாஹ் வஞ்சனை, சூனியம் முதலியவற்றால் ஏற்பட்டுள்ளன எல்லா கெடுதல்களும் நீங்கி அவர் நற்சுகத்தை அடைவார்.

ஒரு புதுப்பானையைக் கொண்டுவந்து அதில் தண்ணீரை ஊற்றிக் கொள்ள வேண்டும். பிறகு 7 மிளகு, கொஞ்சம் மண், சிறிது நெல், முச்சந்தியிலுள்ள 7 கற்கள், சிறிது மருதாணி விதைகள், சிறிது பயிறு, சிறிது பருத்தி விதை இவற்றை ஒன்றாய் விரவி வைத்துக் கொண்டு, அதில் சூரா முஸம்மிலை 21-தடவை ஓதி ஊதவேண்டும். இதன் பின்னர், இவற்றை எடுத்து, ஏற்கனவே தயாராக வைத்திருக்கும் தண்ணீருக்குள் போட வேண்டும்.

அதற்குப் பிறகு சூரா, முஸம்மிலை 11 தடவை ஓதி அத்தண்ணீர் கலவையுள் ஊதி, தலையில் ஊற்ற வேண்டும். இவ்விதம் 7 ஞாயிற்றுக்கிழமைகள் செய்துவந்தால் வஞ்சனை, சூனியத்தினால் ஏற்பட்டிருக்கும் எல்லா கோளாறுகளும் நீங்கி, இன்ஷா அல்லாஹ் பூரண சுகம் கிடைக்கும்.

61. யாராவது ஒரு பெண்ணுக்கு பேறுகால சமயத்தில் கஷ்டம் ஏற்படின் 1. முஸம்மில் சூராவை ஒரு தாளில் எழுதி அவளது கையில் அல்லது கழுத்தில் அல்லது அறையில் அசுத்தம் படாத இடத்தில் கட்டவும். 2. அத்துடன் முஸம்மில் சூராதனை ஓதி அவளின் உச்சி தொடுத்து உள்ளங்கால் வரை ஊதவும். 3. அதனை பீங்கானில் எழுதி கரைத்து அவளை குடிக்கச் செய்யவும். இன்ஷா அல்லாஹ் கஷ்டம் நீங்கி எளிதில் குழந்தை பெற்றெடுப்பாள்.

62. பல்லாண்டு காலமாக மக்கட்பேறு இல்லாதவள் மக்கட்பேறு பெற : அவள் உயரம் ஏழு நூல் இழை எடுத்து கயிறு திரித்து, முஸம்மில் சூராவை 40 தரம் ஓதி ஊதி, 40 முடிச்சுகளை அக்கயிற்றில் முடிந்து, சாம்பிராணி தூபம் காட்டி அவளின் அறையில் கட்டிக் கொள்ளச் சொல்ல வேண்டும்.

63. போர்க்களத்துக்குச் செல்பவர், முஸம்மில் சூராவை 3 விடுத்தம் ஓதி தண்ணீரிலும், கரைத்து வைக்கப்பட்டுள்ள சந்தனத்திலும் ஊதவேண்டும். அத்தண்ணீரினால் அவ்வீரன் தனது முகத்தை கழுவிக் கொள்வதுடன், அச்சந்தனத்தை தன் உடல் முழுவதும் தேய்த்துக் கொண்டு போர்க்களம் புகுந்தால் இன்ஷா அல்லாஹ் போரில் வெற்றியடைவான்.

64. பேய் பிடித்தவளுக்கு முஸம்மில் சூராவை தாளில் எழுதி அவளின் கையில் அல்லது கழுத்தில் கட்டினால் அவளைப் பிடித்திருக்கும் பேய் இன்ஷா அல்லாஹ் அவளை விட்டு நீங்கிவிடும்.

65. யாதொருவருக்கு கை, கால் முடங்கிப் போனால், இதனை பீங்கான் தட்டில் எழுதி 40 நாட்களுக்கு தினமும் கொடுக்கவும். இன்ஷா அல்லாஹ் சுகம் ஏற்படும்.

66. காய்ச்சல், தலைவலி, கை, கால்வலி முதலிய நோய்களுக்கும், ஷைத்தான் பிடித்தவர்களுக்கும்

1. முஸம்மில் சூராவை ஒரு காகிதத்தில் எழுதி தாயத்து அடைத்து அதனை ஐந்து வர்ண நூலில் முறுக்கிய கயிற்றினால் சுற்றிக்கட்டி, அந்த நோயாளியை அணியச் செய்ய வேண்டும்.

2. புதுப்பானையில் தண்ணீர் எடுத்து வைத்துக் கொண்டு முஸம்மில் சூராவை ஏழுவிடுத்தம் ஓதி அத்தண்ணீருள் ஊதி, நோயாளி இருக்கும் இடத்தில் 4 மூலைகளிலும் எறிய வேண்டும்.

3. முஸம்மில் சூராவை ஒரு பீங்கான் தட்டில் எழுதி அதனைக் கரைத்து அந்நோயாளியைக் குடிக்கச் செய்ய வேண்டும்.

இன்ஷா அல்லாஹ் அந்நோயாளி சுகம் பெறுவான்.

67. ஒருவனுக்கு ஆணுடம்பு உகம்புதல் யாதும் இல்லாதிருந்தால், அவனை முன்னால் உட்காரவைத்து தினமும் முஸம்மில் சூராவை 40 விடுத்தம் வீதம் 40 நாளைக்கு ஓதி அவன்மேல் முழுவதும் ஊதி வந்தால், ஆணுடம்புக்கட்டு அகன்று அவனுக்கு நல்லசக்தி ஏற்படுவதுடன் ஆணுடம்பு உகம்புதலும் உண்டாகும்.

68. ஒரு கணவனுக்கு அவனின் மனைவி மீதோ அன்று ஒரு மனைவிக்கு அவளின் கணவன் மீதோ முஹப்பத் இல்லையாயின் சர்க்கரை, (சீனி) போன்றவை சேர்ந்த இனிப்புப் பதார்த்தங்களில் முஸம்மில் சூராவை எழுதி, அதனை மனைவி மீது முஹப்பத்தில்லா கணவனுக்கோ அல்லது கணவன் மீது முஹப்பத் இல்லா மனைவிக்கோ தின்னக் கொடுத்தால் இன்ஷா அல்லாஹ் அவ்விருவரும் நீங்காத முஹப்பத்துடையவராய் இருப்பர்.

69. எல்லா ஹாஜத்துக்கும் கீழ்க்கண்ட முஸம்மிலுடைய அச்சரத்தை எழுதி தாயத்து அடைத்து அணிந்து கொள்ளவும். இன்ஷா அல்லாஹ் எல்லா ஹாஜத்துகளும் நிறைவுறும். இதனை பலர் தம் அனுபவத்தில் கண்டிருக்கிறார்கள். (முஜர்றபு). எனது முன்னோரின் கையெழுத்துப் பிரதியில் கண்டவாறு அப்படியே இதன் அடியில் தந்திருக்கிறேன்.

۲۸۰۸۹	۲۸۰۹۲	۲۸۰۷۴	۲۸۰۸۲
۲۸۰۹۵	۲۸۰۸۳	۲۸۰۱۸۸	۲۸۰۹۳
۲۸۰۸۴	۲۸۰۹۸	۲۸۰۹۰	۲۸۰۸۷
۲۸۰۹۱	۲۸۰۸۴	۲۸۰۸۵	۲۸۰۹۷

70. கீழ்க்கண்டவாறு முஸம்மில் சூராவின் அச்சரம் "பவாயிதுல் குர்ஆனில் முஹிம்மத் மனாபிஉல் அஸ்மா வதல்ஸமாத்" என்னும் நூலில் வரையப்பட்டுள்ளது. "ஜின், ஷைத்தான், தேவு, பரி, கபீது முதலான சகல பரியாத்துக்களுக்கும் இந்த நகல் முஸம்மிலை எழுதிக்கட்டினால், அல்லாஹுத்த ஆலாவின் உதவிகொண்டு சகல பலாய்களும் தூராகிவிடும். (விலகிவிடும்)" என்று அந்நூலில் எழுதப்பட்டிருக்கிறது.

(இதன் சிறந்த பலனை எனது சொந்த அனுபவத்திலும் கண்டிருக்கிறேன்)

– ஆசிரியர்

۲۸۰۴۴	۲۸۰۰۹	۲۸۰۴۲
۲۸۰۴۱	۲۸۰۴۳	۲۸۰۴۵
۲۸۰۴۲	۲۸۰۴۶	۲۸۰۴۰